திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தில், குறிப்பாக 1966-ம் ஆண்டு புயலடிக்கப்பட்டு அந்த 1966-ம் ஆண்டிலே வாங்கப்பட்ட கூட்டுறவு கடன்களுக்கு ஓராண்டு காலம் தவணை வேண்டுமென்று அப்பொழுது கேட்கப்பட்டு, ஓரளவு 1967-ம் ஆண்டு அது நீடிக்கப்பட்டது. 1968-ல் இயற்கையின் காரணமாக திரும்பவும் வறட்சி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இப்பொழுதும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் ஏற்கனவே தவணை தவறிய கடன்களுக்கு இந்த சலுகை அளிக்க வேண்டுமென்ற கருத்தை ஒட்டி, பல விண்ணப்பங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதன் பேரிலே உடனடியாக சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: புயல் அடிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுடைய கடன் தவணை தவறி இருக்குமானல் அவற்றையும் சேர்த்து கவனிக்கும்படியாக நான் கூட்டுறவு வங்கியைக் கேட்டுக்கொள்ளச் சம்மதிக்கிறேன்.

(ஏ) கோவை, பல்லடம், அவிநசி வட்டங்களில் பருவ மழையின்மையும், கூட்டுறவுத் துறைக் கடன்கள் வசூலிப்பை ஒத்திவைத்தலும்

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்:

> "கோவை, பல்லடம், அவிநசி வட்டங்களில் கடந்த மூன்று ஆண்டுகாலமாக தொடர்ந்து பருவமழை தவறிய காரணத்தால் விளைச்சல் இன்றி விவசாயப் பெருமக்கள் மிகுந்த கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டுள்ளதால் அரசாங்கக் கூட்டுறவுத் துறை கடன்களை ஒத்திவைக்கவேண்டியதுபற்றி"

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கோவை, பல்லடம், அவிநசி வட்டங்களைப் பொறுத்தவரையில், கீழ்க்கண்ட பகுதிகளில் மானவாரிப் பயிர்களின் விளைச்சல் 25 சதவீதத்திற்குக் குறைவாகவும், கிணறுகள்மூலம் பாசனம் பெறும் பயிர்களின் விளைச்சல் 35 சதவீதத்திற்குக் குறைவாகவும் உள்ளது என்று குறிப்பிட்டு, அவற்றிற்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அணவாரிச் சான்றிதழை வழங்கியுள்ளார்:—

அவிநசி வட்டம்—வட்டமுழுவதும், கோயம்புத்தூர்—தொண்டமுத்தூர் பிர்ககாவைத்தவிர மற்ற எல்லாப் பகுதிகளும், பல்லடம், வட்டம்—வட்டம் முழுவதும்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அணவாரிச் சான்றிதழ் அளிக்கப்பட்ட பகுதிகளில், கூட்டுறவுச் சங்கங்களால் இதுவரை கொடுக்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு, கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிக்குத் தெரியப்படுத்தி இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல்லடம் வட்டத்திலேயும் அவிநசி வட்டத்திலேயும் 25 சதவிகிதம் 35 சதவிகிதத்திற்கும் குறைவாக விளைச்சல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினர்கள். நடுத்தரக் கடன் என்று மட்டும் அல்லாமல் ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளி வைக்கக்கூடிய முறையிலே அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : குறுகியக் காலக் கடனை நடுத்தரக் கடனுக மாற்றுவதன்மூலமாக அது ஓராளவிற்குத் தள்ளிவைக்கப் படுகிறது. குறுகியக்காலக் கடன், வாங்கிய கடனை ஒரு ஆண்டிலே திரும்பக் கொடுக்க வேண்டுமென்பது. நடுத்தர ஆண்டுக் கடன் என்பது 3 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள்வரை தவணை கொடுக்க வேண்டுமென்பது. ஆனுல் இப்பொழுது நாம் கருத்தில் கொண்டுள்ளது, 3 ஆண்டுகளில் குறிப்பிட்டுத் தரவேண்டுமென்பது. ஆதலால் முதல் ஆண்டு கொடுக்கவேண்டிய தவணை எற்கனவே தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அலுவல் ஆய்வுக்குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில அறிவிப்புகள். தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின்கீழ் 1969–70-க்கு பின் வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1 மாண்புமிகு பேரவைத் தலைவர் (தலைவர்).
2 மாண்புமிகு பேரவை முன்னவர்.
3 மாண்புமிகு நிதி அமைச்சர்.
4 மாண்புமிகு உணவு-விவசாய அமைச்சர்.
5 மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர்.
6 மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர்.
7 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
8 திரு. து. ப. அழகமுத்து.
9 திரு. பி. ஜி. கருத்திருமன்.
10 திரு. கே. விநாயகம்.
11 திரு. பி. கே. மூக்கையா தேவர்.
12 திரு. எ. பாலசுப்பிரமணியன்.
13 திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
14 திரு. க. ர. நல்லசிவன்.
15 திரு. ஆ. கு. சுப்பையா.
16 ஹாஜி மா. மு. பீர் முஹம்மது.
17 திரு. ம. பொ. சிவஞானம்.

(இ) நடைமுறை விதிக்குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப்பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ், 1969–70-க்கு, பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1 மாண்புமிகு பேரவைத் தலைவர்.
2 மாண்புமிகு முதலமைச்சர்.
3 மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர்.
4 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
5 திரு. எல். கணேசன்.
6 திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.
7 திரு. நா. கிருட்டிணன்.